REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
ஐந்தாம் ஆண்டு மலர்
சென்ற ஆண்டினும் சிறப்பாக
15-6-57 அன்று வெளிவருகிறது
★
விவரங்கள் அடுத்து

மலர் 4] சென்னை: வைகாசி 24உ வியாழன் (6—6—57) ★ ★ வெளியூர்: வைகாசி 25உ வெள்ளி (7—6—57) [இதழ் 306

இலங்கைத் தமிழர்கள் அறப்போர்

கேடு விளைவிக்குமாம்--நாடெங்கும் பலாத்காரத்தைத் தூண்டுமாம்!

தமிழர்களே விரும்பவில்லையாம்! கோரிக்கைகளை ஏற்க முடியாதாம்!

பண்டாவின் கலக்கமும் மிரட்டலும்

இலங்கைப் பிரதமரின் சிங்கள வெறியும், அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு அரசாங்கம் இழைத்திடும் தீராத் துயர சம்பவங்களுக்கும் முடிவுகாண இலங்கை பெடரல் கட்சி, வரும் ஆகஸ்டு திங்களில் அறப்போர் துவங்க திட்ட மிட்டுள்ளது தெரிந்ததே. பெடரல் கட்சி தனது நான்கு கோரிக்கைகளையும் பண்டா அரசாங்கம் ஏற்றுக் கொள்வதன் மூலமே போராட்டத்தை நிறுத்த வழிகாண முடியும் என்று சமீபத்தில் உறுதியுடன் அறிவித்ததைக் கண்டு இலங்கைப் பிரதமர் பண்டா நிருபர்கள் மாநாட்டில் இலங்கை தமிழர் அறப்போரை பற்றி எச்சரித்துள்ளார்.

"சுய ஆட்சி உரிமையுடன் தமிழ்ப் பகுதிகளை ஒன்றாக இணைத்தல் வேண்டும்.

"எல்லாத் தமிழர்களுக்கும் பிரஜா உரிமை யளித்தல் வேண்டும்.

"சிங்களமே ஆட்சி மொழி என்று கூறும் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்.

"தமிழ்ப் பகுதிகளை சிங்கள காலனிகளாக்குதல் கூடாது. என்று பெடரல் கட்சியினர் கேட்டுள்ள நான்கு கோரிக்கைகளும் எந்த நாட்டிலும், எந்த அரசாங்கமும் ஏற்க முடியாதவை.

"இதற்காக ஆகஸ்டில் போராட்டத்தில் ஈடுபடுவது எல்லா கட்சிகளுக்கும் சமூகத்தினருக்கும் அளவுகடந்த வேதனையையும், தொல்லைகளையும் தரும்.

"இந்தப் போராட்டம் துவக்கப்பட்டதும், எங்கும் பலாத்காரச் செயல்களுக்கு இடம் தராது என்று பெடரல் கட்சித் தலைவர்கள் கூறுவதை என்னால் நம்ப முடியவில்லை.

"தமிழ் மக்கள் உள்பட, எல்லோரும் இந்த போராட்டம் தவறான தூண்டுதலின் விளைவு என்பதையும், சட்டப்படி பெரும் குற்றத்தை செய்ய தூண்டுவதாகும் என்பதைஉணருவார்கள் என்றே நான் கருதுகிறேன்."

இவ்வாறு, தமிழர் நடத்தத் திட்டமிட்டுள்ள போராட்டத்தை பற்றி குறிப்பிட்டு, பெடரல் கட்சி எடுத்துள்ள நேரடி நடவடிக்கையை கைவிடவேண்டும் என்று எச்சரித்துள்ளார் பண்டா.

மேலும், அவர் நிருபர்களிடம் பேசுகையில் இலங்கையில் வாழும் இந்தியருக்கு பிரஜா உரிமை யளிப்பது பற்றி பண்டித நேருவுடன் விரைவில் கலந்துப் பேசப் போவதாகவும், அதன் பின்னர் 'தகராறு தீர்க்க நல்ல முடிவு காணப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

'இந்து' நிருபருக்கு அளித்துள்ள தனிப்பேட்டியில் இலங்கை தமிழர் போராட்டம் பயனற்றது-தேவையற்றது-யாரும் விரும்பாதது என்றும், இந்த போராட்டத்தில் மொழியைவிட காலனி பிரச்சினைக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது என்றும், வீணாக மக்களை நேரடி நடவடிக்கையில் ஈடுபடுத்துவது அவசியமற்றது என்றும் தெரிவித்து, உலகத்தில் எந்த விஷயத்தையும் சமாதான முறையில் தீர்க்கமுடியும் என்றும், பெடரல் கட்சியினர் கூட போராட்டத்தைக் கைவிட்டு கலந்து பேசி கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள வழிகாணலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

அந்நியர்களின் ஆதிக்கத்தின் கீழ் மட்டுமே போராட்டம் நடத்துவது நியாயமாகும் என்று கூறி, போராட்டத்தின்போது வகுப்புக் கலவரங்களுக்கு நாட்டில் இடம் தரும் பைத்தியகாரத்தனத்திற்கு அனுமதிக்க மாட்டேன் என்று இறுதியாக பயமுறுத்தும் சாயலில் பேட்டியை முடித்துள்ளார்.

காஷ்மீர் யாருக்கு?

'மக்கள் முடிவு செய்யட்டும்'

காஷ்மீர் ஜுன் 6—

காஷ்மீர் இந்தியாவுக்கா?—பாகிஸ்தானுக்கா? என்ற விஷயத்தில் பலர் பலவிதமான முடிவுகளை கூறி வந்துள்ளனர்.

சவுதி அரேபியா அரசர் சாத், 'இது காஷ்மீர் மக்களைப் பொறுத்த விஷயம், எனவே அதைப் பற்றி முடிவு செய்யும் பொறுப்பும் அவர்களிடம் விட்டு விடுவதையே நான் விரும்புகிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

இந்த சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் ஐ. நா. வும், வாக்கெடுப்புமூலம் முடிவுகாண வேண்டும் என்று முடிவு செய்ததை அவர் நினைவு படுத்தியுள்ளார்.

நெறிதவறிய மாணவர்கள் பலனைப் பெற்றனர்

ஐதராபாத், ஜுன் 5—

சென்ற மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற உயர்தர நடுநிலைத் தேர்வில் தகுதியற்ற முறையில் நடந்துகொண்டதாக ஒரு பெண் உள்பட 30 மாணவர்களை 1959 மார்ச்சுத் திங்களுக்குமுன் நடைபெறும் உயர்தர நடுநிலைத் தேர்வில் கலந்துகொள்ளக் கூடாதென்று, ஐதராபாத் நடுநிலைக் கல்விக்குழு தடை செய்துள்ளது. மேற்கொண்டு விசாரணையை முன்னிட்டு 9 பேருடைய முடிவுகள் நிறுத்தி வைத்திருக்கப்பட்டிருக்கின்றன.

மற்றும் தேர்வில் தவறான முறையிலும், தேர்வு மன்றத்தில் முரட்டுதனமாகவும் நடந்துகொண்டதாக 3 மாணவர்களை 1960 மார்ச்சுக்குமுன் நடைபெறும் தேர்வுகளில் கலந்துகொள்ளக் கூடாதென தடுக்கப்பட்டுள்ளனர். மேலும், தேர்வில் தவறான முறையில் நடந்துகொண்டதாகவும், விசாரணை அதிகாரிகளைத் தாக்கியதாகவும் 2 மாணவர்களை 1959 மார்ச்சு வரையிலும், 2 மாணவர்களை 1960 மார்ச்சு வரையிலும் தேர்வில் கலந்துகொள்ளக் கூடாதென்று தடை செய்யப்பட்டதோடு, பதில் வரையும் தாளில் தேர்வு அதிகாரிகளைப் பற்றி நெறியற்றமுறையில் எழுதியதாக 2 மாணவர்கள் இவ்வாண்டு நடைபெறும் தேர்வில் கலந்துகொள்ளக் கூடாதென்றும் தடை செய்யப்பட்டிருக்கின்றனர்.

சவூதி அரேபியாவுக்கு இந்திய மருத்துவக் குழு

புதுடில்லி, ஜுன் 5—

வரும் ஹஜ் விழாவின்போது, இந்திய யாத்ரீகர்களுக்கு மருத்துவ உதவி அளிப்பதற்காக, இந்தியப் பேரரசினர் மூன்று டாக்டர்கள், இரண்டு கம்பௌண்டர்கள் அடங்கிய மருத்துவக் குழுவொன்றை சவூதி அரேபியாவுக்கு அனுப்பிவைத்துள்ளனர் என்று தெரியவருகிறது. இந்த மருத்துவக் குழுவைத் தவிர, ஜெட்டாவில் நடைபெறவிருக்கும் ஹஜ் விழாவுக்கான மருத்துவசாலையில் பணியாற்ற ஒரு டாக்டரையும், ஒரு கம்பௌண்டரையும் இந்தியப் பேரரசினர் ஏற்கனவே அனுப்பிவைத்துள்ளனர் என்றும் தெரியவருகிறது.

திட்டத்தில் உள்ள வேலைகளுக்கே செலவிட வேண்டும்

மாநிலங்களுக்கு வி. டி. கே. கண்டிப்பு

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அபிவிருத்தித் திட்டத்திலும் சேராத பணிகளுக்கு செலவு செய்வதை நிறுத்திக்கொள்ளுமாறு திட்டக்குழுவின் துணைத் தலைவர் வி. டி. கிருஷ்ணமாச்சாரி மாநில அரசாங்கங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

மாநில திட்டத்துறைச் செயலாளர்களின் கூட்டமொன்றில் பேசியபோது அவர், ஒவ்வொரு மாநிலமும் சிறிய சேமிப்புகள் மூலம் எவ்வளவு பணம் சேமிக்க இயலும் என்பதில் ஓர் குறிப்பிட்ட அளவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இத்தகைய சேமிப்புகள்தான் முன்பிருந்ததைவிடப் பண வசதிக்குப் பெரிதும் துணை புரியும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அடுத்த நான்கு ஆண்டுகளில் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகக் கிடைக்கும் பண வசதிகளை விவரமாகக் கணக்கிட்டுப் பார்க்கும்படியும் அவர் மாநில அரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

சென்னையில் சினிமா காட்சிகள்?

சென்னை, ஜுன் 5—

சென்னையில் பரவிவரும் சளி காய்ச்சலை தடுக்க, சென்னை சினிமா கொட்டகைகளில், காலை காட்சிகளும், பகல் காட்சிகளும் சென்னை அரசாங்கம் தடை செய்துள்ளது தெரிந்ததே.

இன்று முதல் மாலையில் துவக்கப்படும் காட்சிகள் 7 மணிக்கு முன்பு ஆரம்பிக்கப்படக்கூடாது என்றும் சென்னை நகர போலீஸ் கமிஷனர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தென் மண்டலக் குழு

சென்னை, ஜுன் 6—

தென் மண்டலக் குழு இத்திங்களில் கூட்டப்படும் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் திட்டமிட்டவாறு தென் மண்டலக் குழு இந்த திங்களில் கூடாது என்று காமராசர் தெரிவித்துள்ளார்.

மண்டலக் குழுவில் அங்கம் வகிக்கும், சென்னை, ஆந்திரம் கேரளம் ஆகிய மாநிலங்களின் வசதியைக் கண்டறிந்த பின்னர் அடுத்த திங்களில் குழு கூட்டப்படலாம் என்று தெரிய வருகிறது.

பண்டிதரின் தாராளம்!

சென்னை, ஜுன் 5—

சேலம் மாவட்டத்தில் முன்பு ஏற்பட்ட புயலால் பாதிக்கப்பட்ட இரண்டு கிராம மக்களின் நலனைப் பற்றி பண்டித நேருவுக்கு இப்போது அக்கறை பிறந்துவிட்டதாம்.

புயலால் பாதிக்கப்பட்ட கடகத்தூர், நதயல்லி, என்னும் கிராமங்களுக்கு பண்டித நேரு தாராளமாக ரூபாய் 500 நன்கொடையளித்துள்ளாராம்.

5,00,000 மக்கள் படுகொலை

கெய்ரோ, ஜுன் 5—

பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் உள்ள அல்ஜீரியாவை விடுவித்து சுதந்திர நாடாகத் திகழச்செய்ய மக்கள் நடத்தி வரும் சுதந்திரப் போராட்டத்தில் இதுவரை 5,00,000 மக்கள் பிரெஞ்சுத் துருப்புகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனராம். சுமார் 4 இலட்சம் பேர் அண்டை நாடான டுனீஷியாவுக்கும் மொராக்கோவுக்கும் விரட்டப்பட்டுள்ளனராம்.

இந்தத் தகவலை தலைவர் டாக்டர் தேபாசின் வெளியிட்டுள்ளார்.

5 மடங்கு ஊதிய உயர்வு தருக!

தெலிங்கானா கிராமாதிகாரிகள் வேண்டுகோள்

ஐதராபாத், ஜுன் 5—

தெலிங்கானாவில் கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கும் ஊதியத்தை 5 மடங்கு உயர்த்துமாறு தெலிங்கானா கிராம அதிகாரிகள் சங்கம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேலும் அச்சங்கம், தெலிங்கானாவில் கிராம அதிகாரிகள் முறையைத் தடைபடுத்தும் எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு முன்னால், அரசாங்கம் தங்களைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும், சர்க்கார் தங்கள் சம்பந்தப்பட்ட எந்த முடிவையும் செய்வதற்கு முன்னால், தங்களை கலந்தாலோசிப்பதற்கான உரிமை சங்கத்திற்கு உண்டு என்றும் மேலும் நிறைவேற்றியுள்ள தீர்மானங்களில் கூறியுள்ளது.

★

பிரச்சினைகளை கவனிக்க பரிசீலனைக் குழு அமையும்

ஐதராபாத், ஜுன் 4—

ஆந்திர மாநில கிராம அதிகாரிகளின் பிரச்சினைகளை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு, விரைவில் ஒரு குழு நியமிக்கப்படுமென்றும், அக்குழுவில் கிராம அதிகாரிகளின் பிரதிநிதிகளும் இடம் பெறுவர் என்றும் நேற்று ஆந்திர மாநில ரெவினியூ அமைச்சர் காளாவெங்கட்ராவ் அறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 6—6—57 வியாழன்

கேட்டதோ 60 இலட்சம்! கிடைத்ததோ 3 இலட்சம்!

வடநாடு தொழில் துறையில் முன்னேறி வருவதும் தென்னாடு தேய்ந்துவருவதும் ஒப்ப முடிந்த உண்மை. அன்னிய ஏகாதிபத்தியத் துவக்கத்திலிருந்து உருவான இந்த விபரீதப் போக்கிற்கு இன்றளவும் முடிவு ஏற்படவில்லை. எதிர்காலத்திலாவது இவ்வெறுக்கத் தகுந்த போக்கு கணிசமான மாறுதலுக்கு உள்ளாகுமா என்பதையும் நிச்சயிப்பதற்கில்லை.

சுய அரசு எனப் பெருமையாகக் கூறிக்கொள்ளப்படும் இந்தியப் பேரரசோ, வடநாட்டை மேலும் மேலும் தொழில் வளமுள்ளதாக ஆக்க, காட்டிவரும் பற்றுதலிலும், மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளிலும் குறைந்தபட்சம் நூற்றில் ஒரு பங்கையாவது தென்னாட்டில் தொழில் ஆக்கத்திற்குச் செலவிடத் தயாராக இல்லை. இம்முரண்பட்ட செயல் முறையை தனது அறிவின்மை — அனுபவமின்மை காரணமாக இந்தியப் பேரரசு பின்பற்றிவருவதாகக் கொள்வதற்குமில்லை. தென்னாட்டைத் தொழில் துறையில் தாழ்த்த வேண்டும் என, வேண்டுமென்றே இந்தியப் பேரரசு திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது என்றுதான் முடிவு கட்ட வேண்டியதாக இருக்கின்றது.

மேற்படி பேரரசின் ஓரவஞ்சனை உள்ளக் கிடக்கையை, முதல் ஐந்தாண்டுத் திட்டம ஒளிவு மறைவுக்கு ஒரு துளியும் இடமில்லாமல் வெளிக்காட்டிவிட்டது. அதையே உறுதிப்படுத்தும் வகையில் இரண்டாவதுத் திட்டமும் அமைந்து கிடக்கின்றது.

தொழில் துறையில் வடநாட்டை உயர்த்தவும் தென்னாட்டைத் தாழ்த்தவும் தான் இயல்பாகப்பெற்றுள்ள இழிந்த மனப்போக்கை, பொதுவாக உலக மக்கள் கண்களிலும் குறிப்பாகத் தென்னகத்து நல்லறிவாளர்கள் கருத்திலும்படாமல் மறைத்துக்கொள்ள, தென்னாட்டின் இயற்கை செல்வத்தின்மீது பழிபோட்டுப் பேசத் தொடங்கியது இந்தியப் பேரரசு. எந்த நாட்டின் தொழில் ஆக்கத்திற்கும் இன்றியமையாத் தேவைகளாக உள்ளவை எரிசாதனங்கள் என்றும், அச்சாதனங்களைத் தென்னகம் போதிய அளவில் பெற்றில்லாமையே அதன் தொழில் தேக்கத்திற்குக் காரணம் என்றும், இந்தியப் பேரரசு இயம்ப முனைந்தது. அக்கூற்று முழு உண்மை அல்ல; சிறிதளவு உண்மையேயாகும்.

தென்னகத்தில் நீர்மின்சாரத்தை உற்பத்திச் செய்வதற்குரிய, நீர் சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்திவிட்டதாகவும், இனி பயன்படுத்துவதற்குரிய நீர்சாதனங்கள் இல்லவேஇல்லை என்றும் ஏற்கனவே இந்தியப் பேரரசு இயம்பி வந்திருக்கின்றது. ஆனால் அதன் பிறகு பெரியாறு நீர் மின்சார விரிவாக்கல் ஏற்பாட்டையும், குந்தா மின்சார ஏற்பாட்டையும், காலந் தாழ்த்தியாவது மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் இந்தியப் பேரரசிற்கு ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது அவ்விருத்தித் திட்டங்களும் வெற்றிகரமாகமுடிவடைய வேண்டிய குறிப்பிட்ட காலவரையறைக்குள், முடிவு பெறுமா என்பது ஐயத்திற்கிடமாகி இருக்கிறது.

வடநாடு—தென்னாடு என வேற்றுமை பாராமல் வடநாட்டையும் தென்னாட்டையும் எந்த நேரத்தில் சமநிலையில் தொழில்துறையில் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் இயல்பாகக் கொண்டதாக இந்தியப் பேரரசு இருக்குமானால், அது எவ்வாறு இதுவரை நடந்துகொண்டு இருக்க வேண்டும்? அது குறிப்பிட்டு வருவதுபோல் தென்னாட்டின் தொழில் ஆக்கத்திற்கு பெரும் இடையூறாக இருந்துவரும் எரிபொருள் இல்லாமையைக் களைந்தெறிந்து, எரி சாதனங்களை அமோகமாகப் பெருக்கும் திட்டங்களுக்கு, முதலிடம் அளிக்க முன்வந்திருக்க வேண்டும். அதுவுமன்றி, அதற்கான புள்ளி விவரங்களை ஏட்டில் எழுதிக்காட்டுவதுடன் திருப்தி பெற்றுவிடாது, உடனடியாக முயற்சியிலும் தலையிட்டு இருக்க வேண்டும்.

ஆனால் இந்தியப் பேரரசோ, தென்னகத்தில் எரி சாதனங்கள் இல்லைஎனக் கூறிக்கொண்டு அதைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்த்து, அதையே ஒரு புகலாகக் கூறிக்கொண்டு, தொழில் துறையில் தென்னாட்டைத் தேங்க வைத்து விட்டு, அதே நேரத்தில் வடநாட்டை தொழில் வளமுள்ளதாக்கும் முயற்சியை மிக மிகத் தீவிரமாக மேற்கொள்ள முனைந்தது. இது நடைமுறை உண்மை யாகும். நிற்க.

பெரியாறு, குந்தாத் திட்டங்களும், முடிவுற வேண்டிய குறிப்பிட்ட காலவரையறைக்குள் முடிவு பெறுவதற்கும் இப்பொழுது தடை ஏற்பட்டு இருக்கின்றது. இத்தகவலை சென்னை தொழில் அமைச்சரான கனம் பக்தவத்சலனாரே வெளிப்படையாகக் கூறி இருக்கின்றார்.

பெரியாறு, குந்தாத் திட்டங்களுக்கும், இன்று தொழில்பட்டு வரும் மின்சார நிலையங்களை விரிவுபடுத்துவதற்கும், வேறு சில மின்விசைப் பணிகளுக்கும், இன்றியமையாத் தேவையாக உள்ள கருவிகளையும் சாதனங்களையும் வெளிநாடுகளிலிருந்து வரவழைக்க வேண்டியதாக இருக்கின்றது. அதற்கு அறுபது இலட்சத்திற்கு அயல் நாட்டுச் செலாவணி அவசியமாகிறது.

அத்தொகையை ஒதுக்கித் தருமாறு சென்னை ஆட்சி, இந்தியப் பேரரசை வேண்டிக் கொண்டிருக்கின்றது. ஆனால் இந்தியப் பேரரசோ, மூன்றே மூன்று இலட்ச ரூபாய்க்குத் தான் அன்னிய செலாவணி ஒதுக்கிஇருக்கிறதாம். தொழில் அமைச்சர் பக்தவத்சலனார், இவ்வுண்மையைக் கூறிஇருக்கின்றார்.

'இதனால் அவசரமான வேலைகள் தடைபடுகின்றன' என்று, அதே அமைச்சர் விளைவையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

வடநாட்டுத் தொழில் திட்டங்கள், குறிப்பிட்ட காலத்தில் வெற்றிகரமாக முடிவுறுவதற்கும், எதிர்ப்பார்க்கப்படும் பலனை விளைவிப்பதற்கும், தேவையான அளவிற்கும் கூடுதலாக அன்னியச் செலாவணியை ஒதுக்கத் தயாராக இருக்கின்ற இந்தியப் பேரரசு, தமிழகத்தின் தேவைக்கான அறுபது இலட்ச ரூபாய்க்கான அன்னியச் செலாவணியை ஒதுக்க மறுப்பது நியாயமாகுமா? முறையாகுமா?

அறுபது இலட்சம் தேவையாகிறது எனக் கோரினால் மூன்றே மூன்று இலட்சத்தை மட்டுமே கொடுக்க இந்தியப் பேரரசு துணிந்து முன்வருகின்றது? இது எதை காட்டுகின்றது?

வடநாடும்—தென்னாடும் தொழில் துறையில் சமமாக முன்னேற்றம் பெறவேண்டும் என்றே இந்தியப் பேரரசு எண்ணிக் கொண்டிருக்கின்றது எனப் பீத்திக் கொள்ளப்படுவதையா? அல்லது இந்தியப் பேரரசிற்குள்ள ஓரவஞ்சனை உள்ளக்கிடக்கையையா? நியாய புத்தி படைத்த காங்கிரசு நல்லறிவாளர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்கட்டும்.

வாய்வீச்சு வீசும் மந்திரிக்கு நகர மன்ற உறுப்பினர் வேண்டுகோள்

கொடைக்கானல் வரவேற்பில் கனம் மந்திரி சுப்பிரமணியத்திற்கு ஏற்பட்ட அனுபவம்

கோடைக்கானல் நகரசபை வரவேற்பில் மாநில நிதிமந்திரி கனம் சுப்பிரமணியம் அவர்கள் புதியதோர் அனுபவத்தைப்பெற்ற சம்பவம் குறித்துத் தகவல் கிடைத்திருக்கிறது.

கடந்த மே திங்கள் 18-ந் தேதியன்று நிதிமந்திரி சுப்பிரமணியம் அவர்கள், கொடைக்கானல் நகரசபை கட்டிய பாலம் ஒன்றைத் திறந்து வைத்தார்.

பின் அவருக்கு நகரசபை மண்டபத்தில் வரவேற்பு ஒன்று கொடுக்கப்பட்டது.

தலைவர் கே. பி. காதர்பிச்சை தலைமை வகித்து மந்திரிக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்து கோரிக்கைகள் பலவும் கூறினர்.

மந்திரி சுப்பிரமணியம்பதிலளிக்கையில் கோரிக்கைகளைக் கவனிப்பதாகவும் கூறினர்.

அடுத்து, நகரசபை உறுப்பினர் கே. எம். எம். மேத்தா (தி.மு.க.) நன்றி தெரிவித்துப் பேசுகையில், குறிப்பிட்டதாவது :—

10 ஆண்டுக்காலமாக வரும் மந்திரிகள்-கவர்னர்கள் எல்லோருக்கும் வரவேற்புத் தந்திருக்கிறோம். கோரிக்கைகளையும் தெரிவித்திருக்கிறோம். ஆனல் இதுவரை எவ்வித பலனும் ஏற்படவில்லை.

இந்த நிதி அமைச்சராவது கவனிப்பாரா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விஷயமாகும். இந்தப் பகுதி மக்கள் இட்டோது வாழ வழியின்றி மலையாளப் பகுதிகளுக்கு பிழைப்புத் தேடி ஓடுகிறார்கள்.

நிதியமைச்சரோ சட்டசபையில் எதிர்க்கட்சியில் உட்கார்ந்திருந்தவர்களைச் சுட்டிக்காட்டி, உங்களைவிட எங்களுக்கு தமிழ் மக்கள் மீது அதிக அக்கறை உண்டு என்று கூறியிருக்கிறார்கள்.

அது உண்மையானல், இந்த பிரதேச மக்கள் வெளியிடங்களுக்கு ஓடிக்கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கு இங்கு வாழ வழி செய்யபட்டும். இங்கு காகிதம், தீப்பெட்டிக் குச்சி, பழவகை பண்ணை முதலிய தொழில்கள் துவங்க வாய்ப்புண்டு. இவற்றை கனம் மந்திரி செய்வாரா ?

1957 ஜுன் 1-ந் தேதியிலிருந்து 1958 எப்ரல் 30-ந் தேதிவரை பொதுக் கணக்குக் குழுகளில் தொண்டு செய்வதற்காக, மக்கள் சபையைச் சேர்ந்த பதினைந்து உறுப்பினர்களும், மாநிலங்களின் சபையைச் சேர்ந்த எழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக பத்திரிகை அறிவிப்பொன்றிலிருந்து தெரியவருகிறது.

முதலாளித்துவத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையில் சர்க்கார் தடுமாறி நிற்கிறது

ஒன்றுக்கொன்று முரண்பட்ட அரசியல்-பொருளாதாரக் கொள்கைகளைக் கடைபிடிக்கிறது

சிந்திச் சீரழியும் பணம் மிச்சமானல் ஊழியர் கோரிக்கைகளைக் கவனிக்கலாமே

தபால்இலாகாவிற்கு தனி 'பட்ஜெட்' வேண்டும்

தஞ்சை தபால்ஊழியர் மாநாட்டில் அண்ணு முழக்கம்

" எந்தவித அரசியல் கட்சிகளிலும் ஈடுபாடு கொள்ளாமல், எந்த அரசியல் பிரச்சினைகளிலும் தலையிடாமல் முழுக்கமுழுக்க தொழிலாளர் நலன்களையே பிரதானமாகக் கருதிச் செயலாற்றும் தொழிற்சங்கங்களின்பால் சர்க்கார் அனுதாபத்தோடும், நியாயமாகவும் நடந்துகொள்ளத் தவறிவிடுவதின்மூலம், அந்தத் தொழிற்சங்கங்களை அரசியல் கட்சிகளின் துணையை நாடுமாறு சர்க்கார் துரத்திவிடுகின்றது. பதிலுக்கு அரசியல் கட்சிகளும் அந்தத் தொழிலாளர்களை தங்கள் கட்சி நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டுவிடுகிறார்கள் "

—என்று நமது அண்ணு அவர்கள் தஞ்சையில் நடைபெற்ற அகில இந்திய ஆர். எம். எஸ்- மூன்றாம் வகுப்பு ஊழியர் சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளை மாநாட்டில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தொடர்ந்து பேசிய அண்ணு அவர்கள் கூறியதாவது:—

தனி பட்ஜெட்வேண்டும்!

சில சந்தர்ப்பங்களில் தபால்-தந்தி இலாகாவை சர்க்கார் 'உபயோக' இலாகாவாகவும், சில நேரங்களில் 'வர்த்தக' இலாகாவாகவும் கருதுகிறார்கள். ஆனல், இரயில்வே இலாகாவிற்குத் தயாரிப்பதைப் போன்ற தனி 'பட்ஜெட்' இந்த தபால்-தந்தி இலாகாவிற்கும் தயாரிக்கப்படவேண்டியது அவசியம் என நான் கருதுகிறேன்.

போலி சரக்கு!

ஊழியர்கள் என்ன கேட்டாலும் சர்க்கார், நிதி இல்லை என்ற போலிச் சாக்கினைக் கூறிவிடுகின்றனர். மேலும், மிக சுபிட்சமானதோர் எதிர்காலம் காத்திருப்பதாகவும், அதற்குத் தான் ஐந்தாண்டுத் திட்டம் என்றும் கூறி, சர்க்கார் இப்போது மக்களை சொல்லொணுத் துயரத்தில் ஆழ்த்துவது நியாயமாகாது.

ஜனநாயகத் திட்டமல்ல!

இந்த ஐந்தாண்டுத் திட்டங்களே, ஜனநாயக அடிப்படையில் உருவாக்கப்பட்ட திட்டங்கள் அல்ல. மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் அல்ல.

பாழாவதைத் தடுத்தால்!

சர்க்கார் நிர்வாகச் செலவில் அனுவசியமாகப் பாழாகிற, சிந்திச் சீரழிகிற பணத்தை பாழாகாமல் தடுத்தால், இலஞ்ச ஊழலை ஒழித்தால், ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற தேவைப்படும் பணம் எளிதில் கிடைக்கும் என நான் மனமார நம்புகிறேன்.

தள்ளாட்டம் ஏன் ?

சர்க்கார், முதலாளித்துவத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையில், தனியார் முயற்சிக்கும் தேசீயமயமாக்கலுக்கும் இடையில் நின்று, தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கின்றனர்; நடுவழி ஒன்றில் நடக்க முயற்சிக்கின்றனர். இதன் விளைவாக ஒன்றுக்கொன்று முரண்பாடான அரசியல் பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றனர். இந்தத் தடுமாற்ற நிலைதான் இப்போதைய கஷ்டங்களுக்கெல்லாம் காரணமாயிருக்கிறது.

திருச்சூரில் 300 ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

திருச்சூர், ஜுன் 4—

அழகப்பா நகரில் உள்ள அம்பலூர் நெசவாலையில் பணியாற்றும் சுமார் 3000 தொழிலாளர்கள், நேற்று காலை முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

கடந்த செப்டம்பர் திங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை அமுல் செய்யுமாறும், உடனடியாக போனஸ் வழங்குமாறும் கோரியே அவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். என்று தெரிகிறது.

சட்டியில் இருந்தாலல்லவா?

மக்களிடம் பணம் ஏது வரிமேல் வரி தர?

சென்னைக் கூட்டத்தில் கண்ணதாசன்

29—5—57 அன்று மாலை சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில், திருவல்லிக்கேணி தொகுதி தி. மு. கழகக் கிளைகள்—சார்பு மன்றங்கள் ஆதரவில் நடைபெற்ற புது வரிகள் கண்டனப் பொதுக்கூட்டத்தில் தோழர் கண்ணதாசன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது:—

"தேர்தல் முடிந்ததும் முடியாததுமாக அமைச்சர்கள் பதவி ஏற்றதும் ஏற்காததுமாக புதிய வரி விதிப்புகள் வந்திருப்பதைப் பார்க்கிறீர்கள்.

"மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட்டின்படி இந்தப் புதிய வரிகள் சுமத்தப்படுகின்றன; இன்னும் சென்னை அரசாங்கத்தினுடைய வரி விதிப்புகள் பாக்கியிருக்கிறது. ஆகவே, எந்த நேரத்திலேயும், கீழே இருக்கிற சர்க்கார் வரி விதித்தாலும், மேலே இருக்கிற அரசாங்கம் வரி விதித்தாலும் இரண்டு வரிகளையும் சுமந்து தீரவேண்டிய நிர்ப்பந்தமான பொறுப்பு தென்னாட்டைச் சேர்ந்த திராவிட மகனுக்கு—தமிழ் மகனுக்கு ஏற்படுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆக ஒரு குதிரையின் மீது இரண்டு வகைச் சுமை; இந்த அநீதியை உலகத்திலே எங்கேயும்—யாரும் கண்டது கிடையாது.

"ஒரு அரசு வைத்து ஒழுங்காக நாட்டை ஆளுகிறவர்கள், அந்த ஒரு அரசினுடைய வரிச் சுமையை ஏற்கவேண்டிய நேரம் வரும்போது, அது நியாயந்தானா என்று ஆராய்ந்து, நியாயந்தான் என்றால் ஏற்பதும், அது நியாயம் இல்லையென்றால் இல்லையென்று தெரியும்போது கண்டிப்பதும் எதிர்ப்பதுமாகிய காரியங்களில் ஒரே அரசாங்கத்தோடு போராடவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

'ஆனால் தமிழகத்திலே—திராவிட நாட்டிலே வாழ்கின்ற நாம் இரண்டு அரசாங்கங்களின் வரி விதிப்புகளை—இரண்டு அரசாங்கங்களின் அபிப்பிராயங்களை—இரண்டு அரசாங்கங்களுடைய சுமைகளை சுமந்து தீரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

'ஒரு சுமையை ஏற்றுகிற ஒரு அரசாங்கக்காரன், 'சுமையை எதிர்காலத்தில் உன்மீது ஏற்றப்படும்; அதையும் தாங்கிக்கொள்ள தயாராயிரு,' என்று எச்சரிக்கை விடுத்தேதான் அந்தச் சுமையை நம்மீது ஏற்றுகிறான். மேலே இருக்கிறவர்கள் எஜமானர்கள் என்றால், கீழே இருக்கிற 'எடுபிடி'கள் ஏற்றுகிறதைக்கூட, நாம் அதற்கும் கீழே இருந்து தாங்கிக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

"மத்திய அரசாங்கம் இந்த நாட்டினுடைய பொது அரசாங்கம்—நடு அரசாங்கம் என்றால், அதனுடைய ஏவலுக்கு பல நேரங்களில் கீழ்ப்பட்டும், சில நேரங்களில் சுயேச்சையாகவும் ஆட்சி நடத்துகின்ற இந்த நாட்டிலே இருக்கின்ற சென்னை அரசாங்கம், 'அவர்கள் சொல்லுவதையும் நீ கேட்கவேண்டும்; இங்கே நாங்கள் விதிக்கின்ற வரியையும் கொடுத்தாகவேண்டும்,' என்று இரண்டு வகை நிர்ப்பந்தத்திலே, தன்னுடைய சகோதரர்கள் என்று தங்களாலே இல்லாவிட்டாலும், மற்றவர்களாலேயும்—தமிழகத்து மக்களாலேயும் சொல்லப்படுகின்ற தமிழர்கள் மீது விதிப்பதை நீங்கள் பார்க்கின்றீர்கள்.

"ஒரு எண்ணெய் வரியோ, அல்லது இரயிலே போவதற்கான அதிகப்படியான கட்டணமோ, தீப்பெட்டி வரியோ, எதை நீங்கள் எடுத்துக்கொண்டு பார்த்தாலும், டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு பணம் கொடுத்தவர்கள்மீது விதிக்கப்பட்ட வரியல்ல அது; டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்குக் கார் கொடுத்தவர்கள்மீது விதிக்கப்பட்ட வரியல்ல அது; டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு உதவி செய்தவர்கள்மீது விதிக்கப்பட்ட வரியல்ல அது; உதவி செய்தவர்கள்மீது விதிக்கப்பட்ட வரிகளைப் பற்றி தள்ளிவிடுங்கள்—வரிகள் விதிக்கப்படாமலேயே—வருமான வரியிலே தகராறு இருந்தாலும், அதை தீர்த்து வைக்க அரசாங்கத்திலே உள்ளவர்கள், அவர்கள் பணக்காரர்கள் என்பதற்காகவாவது முயற்சி எடுப்பார்களே தவிர, வரியை விதிப்பதற்கு எந்த நேரமும் தயாராக இல்லை.

"யார் நிச்சயமாகக் காங்கிரசு ஓட்டுப்போடமாட்டார்கள் என்று கருதப்பட்டதோ, யாருடைய ஓட்டை 'நாம் இலட்சக்கணக்கான பணம் கொடுத்து வாங்கித் தீர வேண்டியிருக்கிறதே' என்ற அலுப்பு ஏற்பட்டதோ, எந்த ஏழைமக்கள்மீது அவர்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டதோ, அந்த ஆத்திரத்தைத்தான் தேர்தல் முடிந்ததும் முடியாததுமாக நம் முன்னாலே காட்டியிருக்கிறார்கள்.

" இந்த பட்ஜெட்டைப் பற்றிய விவரங்களையெல்லாம் தேர்தலுக்கு முன்னாலேயே தயாரித்திருக்கக்கூடும்; நமது பொதுச் செயலாளர் அறிக்கையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதை தேர்தல் காலத்திலே அவர்கள் சொல்லவில்லை.

"சோஷலிச அமைப்புச் சொன்னார்கள்; ஏழைமக்களுக்கு வாழ்வு தரப் போகிறோம் என்றார்கள்; 60-க்கு 40 விவசாயிக்கு வழங்கியிருக்கிறோம் என்றார்கள்; விவசாயச் சட்டம்-கடன் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம் என்றார்கள். காமராசரும் தனக்குத் தெரிந்தவரையிலே ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்துவந்தார். அவரைச் சார்ந்தவர்கள் 'குழந்தை'களிலிருந்து பெரியவர்கள்வரை அத்தனை பேரும் பல இடங்களிலே அதைப் பற்றி பிரச்சாரம் செய்தார்கள்—முழக்கினார்கள்.

"இந்தப் புதிய வரி விதிப்பைப் பற்றிய லேசான ஒரு சந்தேகம் கூட ஏற்படாதவகையில் தேர்தல் பிரச்சாரத்தை அவர்கள் நடத்தினார்கள். மக்கள் முன்னாலே அவர்கள் சொன்னதெல்லாம், 'இந்த ஏழை மக்களுக்கான வாழ்வை அளிப்பதற்காகவே இந்தத் தேர்தலிலே நிற்கிறோம்; இந்த ஏழை மக்களுடைய வாழ்வை வகுப்பதற்காக எங்களை உள்ளே அனுப்புங்கள்,' என்று மேடைதோறும் முழக்கினார்கள்; முழக்கியும் கேட்காத மக்களை பணம் கொடுத்து மடக்கினார்கள். ஆகவே அவர்கள் இரண்டு வகையாலே உள்ளே நுழைந்தார்கள். நுழைந்ததும் நுழையாததுமாக, 'நீ காலையிலே எழுந்து நெருப்பெட்டி வாங்க வேண்டுமென்றால் முக்காலணாவுக்கு ஒரு அணா கொடுத்தாக வேண்டும்' என்ற நிலையை உண்டாக்கிவிட்டார்கள்.

"வரி எந்த நிலையிலேயிருந்தாலும், விலை ஏறுகிற நிலை மூன்றிலே ஒரு பாகம் ஏறுகிறது. சாதாரண மனிதனுடைய அன்றாட வாழ்வில் ஒரு ரூபாய் அதிகப்பட்டாலும், சராசரி வாழ்க்கையில் ரூ. 30 செலவழிக்கக்கூடிய ஒருவன் ரூ. 45 செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது.

"இந்த நிர்ப்பந்த வரிகளெல்லாம்வசூலானதற்குப் பின்னாலே, அவர்கள் விருப்பப்படியும் - அவர்கள் கற்பனையிலிருக்கிற கனவின் படியும், ஐந்தாண்டுத் திட்டம் இந்த நாட்டுக்கும் சேர்ந்து பலன் கொடுத்ததற்குப் பின்னாலே, 'நாட்டு மக்களுக்கு வாழ்வு கிடைத்துவிட்டது. ஏற்கனவே விதிக்கப்பட்ட வரிகளை தளர்த்துவோம்" என்ற கருத்து ஏற்படுமாவென்றால், ஆச்சாரியாரின் கருத்துப்படி மக்கள்மீது ஏறிய வரி தளர்த்தப்படுவதும் கிடையாது - இறக்கப்படுவதும் கிடையாது.

"ஆட்சிக்குவந்தவர்களெல்லாம் புது வரியின்மீது புதுவரி-புதுவரியின்மீது புதுவரி என்று போட்டுக்கொண்டே போனார்கள். அவர்கள் கற்பித்த 'பரியெல்லாம் கடைசியில் நரியான' கதையை நாம் கண்டோமே தவிர, 'பரி பரியாக வெளியிலே வரவில்லை'-வரி திரும்ப எடுக்கப்படவில்லை.

"இந்த சூழ்நிலையிலேதான், நம்மீது சுமத்தப்படுகின்ற வரிகளையும் நாம் தாங்கித் தீரவேண்டுமென்ற உபதேசத்தை, வரிபோட்டவர்கள் செய்வதைக் காட்டிலும், இங்கே அவர்கள் சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டுகிறவர்களும்—காலைப்பிடிக்கிறவர்களும் சேர்ந்து இந்த வரிகளை நாம் சுமந்து தீரவேண்டுமென்று நிர்பந்தப்படுத்துகிறார்கள்'

" சிலர் சினிமாவுக்குக் கொடுக்கிற பணத்தை இதற்குக் கொடுக்கலாமே என்கிறார்கள்; சிலர் அலங்காரத்திற்குக் கொடுக்கிற பணத்தை இதற்குக் கொடுக்கலாமே என்கிறார்கள். வரிகொடுப்பதற்கான காரணங்களை அவர்கள் சொல்ல வரும்போது, வரி இவ்வளவு பலன்தருவது என்று சொல்லுவதைக் காட்டிலும், 'இதை நீ குறைத்துக் கொண்டு அதற்கு நீ கொடுத்தால் என்ன? என்று கேட்கிறார்கள்.

"இதை மட்டுமல்ல-உண்கின்ற உணவில் ஒருவேளை குறைத்துக் கொண்டு வரிகொடுக்க, இந்த நாட்டுமக்கள் தயாராயிருக்கிறார்கள். ஆனால், 'அந்த ஒருவேளை உணவை நான் குறைத்துக்கொள்வதாலே என்னுடைய வருங்காலத் தலைமுறைக்கு—சந்ததிக்குகூட ஒருவேளை உணவு கிடைக்குமென்றால், அந்த 'கியாரண்டி'க்காக இதை நான் நடத்திக்காட்டத் தயங்கமாட்டேன்' என்று ஒவ்வொருவரும் கருதுகிறார்கள்.

"அன்றாடங் காய்ச்சிகளாக அலைகின்ற ஏழை மக்கள் வாழ்கின்ன இந்த நாட்டிலே—பம்பாயைப்போல் கல்கத்தாவைப் போல் சுகவாசிகளே இல்லாத இந்த நாட்டிலே—பிச்சைக்காரர்களைப் பெருமிதமாகப் படைத்த இந்த நாட்டிலே புதிய வரிகளனைத்தையும் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் ஏற்படுமானால்—நிர்பந்தம் ஏற்படுமானால், அந்த வரியை கொடுக்காமலிருந்தால் என்ன என்ற மனோபாவம் ஏற்படும்; அந்த மனோபாவம் இதுவரை விதிக்கப்பட்ட வரிகளின்மீது எழுந்ததில்லை; அவை அன்றாட வாழ்க்கையை இவ்வளவு தூரம் பாதித்ததில்லை. இவ்வளவு தூரம் பாதிக்கின்ற ஒரு வரியை மேலும் கொடுத்துக்கொண்டேயிருப்பதற்கு 'மடியிலே' இல்லை.

'சட்டியிலே இருந்தால்தான் அகப்பையிலே வரும்?'

வடநாட்டில் 'தண்டகாரண்ய' திட்டமாம்

ஓடிவந்த அகதிகளுக்கு பல கோடி ரூபாய் செலவில் வசதிகள்

புதுடில்லி, ஜுன் 5—

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து அகதிகள் ஓடிவருவதும், அவர்கள் விஷயத்தில் டில்லி அரசாங்கம் அதிக அக்கறையெடுத்துக்கொண்டு புது வாழ்வளிக்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் பல குடியிருப்பு வாழ்க்கை வசதிகளை செய்து வருவதும் தெரிந்ததே.

இந்த அகதிகளின் எதிர்கால நல்வாழ்விற்காக உருவாக்கப்பட்டுள்ள 'தண்டகாரண்ய திட்டம்' பற்றிய தகவல்களை எச். எம். பட்டீல் வெளியிட்டுள்ளார்.

தாமோதர அபிவிருத்தி திட்டத்தைப்போல, தனி அதிகாரம் பெற்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி 80,000 மைல் பரப்பளவு உள்ள பகுதியில் திட்டத்தை அமுல் செய்து, அகதிகளுக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தரப்படுமாம். தண்டகாரண்யத்தில் உள்ள காடுகளை வெட்டிச் சீர்திருத்தப்படுமாம்.

இந்த திட்டத்தைப் பற்றி பண்டித நேரு பேசுகையில் அகதிகளின் பிரச்சினையை அந்நியர் உதவி இல்லாமலே இந்தியா சமாளித்து வந்துள்ளது என்றும், மேலும் தனது கடமையை ஏற்று செய்வது தன் கடமை என இந்தியா கருதுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

நகரசபை லாரி நிலையம்

160 வண்டிகள் நிற்பதற்கு வசதி

சென்னை, ஜுன் 4—

சென்னை ஒற்றைவாடை பகுதியில் சென்னை நகரசபை ஒரு லாரி நிலையம் ஏற்படுத்தியுள்ளது. தற்பொழுது இங்கு 160 லாரிகள் தங்க வசதியளிக்கப்பட்டுள்ளது.

கழுவும் மேடைகள், பழுது பார்க்கும் ஷெட்டுகள், டிரைவர்கள் தங்கும் அறைகள், கக்கூஸ், குளிக்குமிடம் மற்றும் பல வசதிகள் செய்துத் தர நகரசபை முடிவு செய்துள்ளதாம்.

இங்கு நிறுத்தப்படும் லாரிகளுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வாடகை வசூலிக்கப்படுமாம். இந்த லாரி நிலையத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளுக்காக நகரசபை ஒரு இலட்சம் ரூபாய் செலவிடவும் முடிவு செய்துள்ளதாம்.

ஆர்ப்பாட்டத்தையே தொழிலாகக்கொண்டவர்கள்!

5 இலட்சம் பேர் வேண்டுமென்கிறார் லோகியா

உ. பி. மாநிலத்தில் சோஷலிஸ்டுகள் நடத்தும் 'சத்தியாக்கிரக'ப் போராட்டத்தில் இதுவரை சுமார் 2,000 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இதனால் சோஷலிஸ்டுக் கட்சியின் செல்வாக்கு அந்த மாநிலத்தில் ஓரளவுக்கு உறுதி செய்யப்படுவதாகவும் சில பத்திரிகைக்காரர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

மன்னிப்பும் விடுதலையும்

மாநில சர்க்காரின் செய்திஇலாகா, தினம் தினம் கைது செய்து தண்டிக்கப்பட்ட தொண்டர்களில், இதுவரை சுமார் 5 சதவிகிதத்தினர், மன்னிப்புக் கேட்டு விடுதலை பெற்றுவிட்டனர் என்று கூறுகின்றனர்.

போலி

ஆனால், விடுதலை செய்யப்படுகிறவர்கள் கட்சித் தொண்டர்கள் அல்லவென்றும் இப்படி இயக்கத்தை இழிவுபடுத்துவதற்காகவே வேண்டுமென்றே கூலிகளை நியமித்து, இயக்கத்தில் ஈடுபடுத்தி கைது செய்து பின் விடுவித்துவிடுவதாகவும், எனவே விடுதலை பெறுகிறவர்கள் எல்லாம் போலிகள் என்றும், சோஷலிஸ்டுக் கட்சியினர் கூறியிருக்கின்றனர்.

நாட்டில் ஆர்ப்பாட்டத்தையே தொழிலாக அல்லது பழக்கமாகக் கொண்டவர்கள் சுமார் 5 இலட்சம் பேர் இருந்தால் அவர்களால், நாட்டில் தீமைகளுக்கு எதிராகப் போராடி வளத்தைக்கொண்டு வந்து சேர்க்கமுடியும் என்று டாக்டர் லோகியோ, போராட்ட ஆதரிப்புக் கூட்டம் ஒன்றில் கூறினாராம்.

'HOMELAND'

(ஆங்கில வார இதழ்)

★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியில் மற்றுமோர் புதிய கட்டம்—பொன்னான வாய்ப்பு

'ஹோம்லண்ட்'

தாயகத்தின் எழிலும் வளமும், வாழ்வும் பண்பும், உரிமையும் சுதந்திரமும், வடநாட்டு எத்தரால் கொள்ளையிடப்படும் கொடுமையை உலகுக்கு உணர்த்த—உற்றாராம் ஆந்திர, கன்னட, கேரள சோதரர்களுக்கு அறிவுறுத்த

'ஹோம்லண்ட்'

★

அண்ணா

அவர்களை

ஆசிரியராகக்கொண்டு

9-6-57 முதல் வெளிவருகிறது

சென்னை, ஆந்திரா, மைசூர் அடங்கிய தென்மண்டலம்

உணவுப் பிரச்சினைக்குப் புதிய ஏற்பாடு

அபிவிருத்திக் கவுன்சில் முடிவு

சென்னை, ஜுன் 5—

டில்லியில் தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொண்ட முதல் மந்திரி காமராசர், நிதிமந்திரி சுப்பிரமணியம் ஆகியோர் இன்று சென்னை வந்து சேர்ந்தனர். உணவு-சப்ளை விஷயத்தில் சென்னை, மைசூர், ஆந்திரா ஆகிய ராஜ்யங்கள் அடங்கிய (கேரள ராஜ்யமில்லாத) தென் மண்டலம் அமைக்குமாறு சென்னை பலமாக வற்புறுத்தியதாக அவர்கள் நிருபர்களிடம் கூறினர்.

மைசூருக்குப் புஞ்சை தானியங்கள் தேவையென்றும் இவற்றை ராயல சீமையிலிருந்து சப்ளை செய்ய முடியுமென்றும் காமராசர் கூறினார்.

ஒரு கேள்விக்கு காமராசர் பதிலளிக்கையில், மணங்குக்குக் குறைந்தபட்ச விலை ரூ. 15 என்ற விலைக்கு சென்னை கட்டுப்படவில்லையென்றும் இது ஆலோசனையில் இருந்து வருவதாகவும் கூறினார்.

கேரளம் அல்லாத தென்மண்டலம் அமைக்கும் யோசனை அனைவராலும் நன்முகவரவேற்கப்பட்டதாக சுப்பிரமணியம் சொன்னார். மத்திய சர்க்காரும் இதற்குச் சம்மதிப்பதாகவும், ஆனால் கேரளத்தை ஒதுக்குவதை அவர்கள் விரும்பவில்லை யென்று தோன்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கேரளத்தின் தேவையை மத்திய சர்க்கார் நேரடியாகச் சப்ளை செய்யலாமென்று அவர் சொன்னார். "சென்னை, மைசூர், ஆந்திரா ஆகிய ராஜ்யங்கள் அடங்கிய பகுதி சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வதாக இருக்கும். ஆந்திராவில், அதன் சொந்தத் தேவை பூர்த்தியான பின் சுமார் 4 இலட்சம் டன் அரிசி உபரியாக இருக்கும். சென்னை ராஜ்யத்தின் 3 இலட்சம் டன் தேவைக்கும் மைசூரின் 50,000 டன் தேவைக்கும் இது போதும்" என்று சுப்பிரமணியம் சொன்னார்.

மத்திய உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் இம்மாதம் 8-ந் தேதி இங்கு வந்து, உணவுப் பிரச்சினை பற்றி மந்திரிகளுடனும் மற்ற அதிகாரிகளுடனும் விவாதிப்பார்.

தென் மண்டலத் திட்டத்தின் கீழ் இப்பிரதேசத்திற்கு இறக்குமதி செய்யப்படும் அரிசி சப்ளை செய்யப்படாது. அது கேரளத்திற்குமட்டுமே சப்ளை செய்யப்படும். தென்மண்டல இராஜ்யங்களுக்கு உணவுப் பொருள்கள் தேவையானல் அரிசிக்குப் பதில் வடக்கேயிருந்து கோதுமை சப்ளை செய்யப்படும். இந்த திட்டம் எளியதாக இருப்பதுடன், கூட்ஸ் வாகன் தேவையும் இதனல் குறையும்.

"தேசிய அபிவிருத்திக் கவுன்சிலில் விவாதிக்கப்பட்ட குடும்ப கார்டு முறை ஏற்கெனவே மேற்கு வங்காளத்தில் அமுலில் உள்ளது. கேரளத்லும் இதை அமுலுக்குக் கொண்டுவா உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆனல், இது சென்னையில் அமுலாக்கப்படுவதற்குச் சந்தர்ப்பமில்லை. இங்கு இத்தகைய கார்டுகளுக்கு அவசியமிருப்பதாகத் தெரியவில்லை. இது அந்தந்த ராஜ்யத்தின் உசிதமான முடிவுக்குவிடப்பட்டிருக்கிறது"

என்று, சுப்பிரமணியம் கூறினார்.

அரிசிக்குக் குறைந்த பட்ச விலை?

புதுடில்லி, ஜுன் 4—

அரிசிக்கு மணங்கு ஒன்றுக்கு ரூ. 15 வீதம் குறைந்த பட்ச விலை உத்தரவாதமளிக்கலாமென்று தேசிய அபிவிருத்தி கவுன்சிலின் கமிட்டி சிபாரிசு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. (ஒரு மணங்கு என்பது சுமார் 23½ பட்டினம் படி கொண்டது.)

இது சம்பந்தமாக இறுதி முடிவு ஏற்படும் முன் மாநில சர்க்கார்கள் இந்த யோசனையை பரிசீலனை செய்யும்.

விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதும் இப்பொழுதுள்ள அதிக விலையைக் குறைப்பதும் இதன் நோக்கமாம்.

கேரள முதல் மந்திரி மணங்குக்கு 15 ரூபாய் குறைந்தபட்ச விலை உத்தரவாதமளிக்கலாமென்று அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது. மணங்குக்கு ரூ. 15 முதல் ரூ. 16 வரை குறைந்தபட்ச விலை உத்தரவாதமளிக்கலாமென்று மற்ற மாநில முதல் மந்திரிகள் கருதுவதாகத் தெரிகிறது.

இந்தப் பிரச்சினையை மாநிலங்களின் முடிவுக்கு விடலாமென்று ஆரம்பத்தில் கருதப்பட்டது. ஆனல் இதனல் மாநிலத்துக்கு மாநிலம் விலையில் வித்தியாசம் ஏற்படுமென்றும் அதன் விளைவாக ஒரு மாநிலத்திலிருந்து மறு மாநிலத்துக்குக் கள்ளத்தனமாக கடத்தப்படுமென்றும் கருதப்படுகிறது. ஆகவே மண்டல அடிப்படையில் விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கருதப்படுகிறதாம்.

உணவு தானிய வரியை இழக்க விரும்பவில்லையாம்!

மாநில முதலமைச்சர்களின் ஆசைக்கு முடிவில்லை!

புதுடில்லி, ஜுன் 5—

உணவுதானியங்கள்மீது மாநில அரசாங்கங்கள் விற்பனை வரி விதிக்கக்கூடாது என்ற யோசனையை மாநில முதலமைச்சர்கள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லையாம். உணவு தானியங்கள்மீது வரியாக வரும் வருவாயை இழப்பதென்றால் அது மிகவும் தொல்லையை உண்டாக்கும் என்றும், அதுவும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய இந்த நேரத்தில் இவ்வருவாயை இழப்பது என்றால் மிகவும் கஷ்டம் என்றும் கூறினார்களாம்.

இத்திங்கள் 4-ம் நாள் நடைபெற்ற 'தேசிய அபிவிருத்தி கவுன்சில்' கூட்டத்தில் தான் மேற்கண்டவாறு கூறியதாகத் தெரியவருகிறது.

பீகாரில் உணவு பஞ்சம்

பாட்னு, ஜுன் 6—

பீகார் மாநிலத்தில் உணவு நிலைமை அச்சமூட்டக்கூடிய வகையில் உள்ளதாகவும், விளைச்சல் தவறிவிட்டதால் பூர்ணியா, சகர்சா மாவட்டங்களில் மிகவும் கவலையேற்பட்டிருப்பதாகவும் மாநில உணவு அமைச்சர் பி. படேல் தெரிவித்ததாகத் தெரிகிறது.

இவர் டில்லிக்குச் சென்று மாநில உணவு நிலையை மத்திய பேரரசிடம் தெரிவித்தாராம். பஞ்ச நிலையை கட்டுப்படுத்த ஜுன் 2-ம் நாள்வரை பம்பாய் முதலிய துறைமுகங்களிலிருந்து 40,000 டன் வெளிநாட்டு கோதுமை பீகாருக்கு அனுப்பப்பட்டு, 25,000 டன் வரை பஞ்சப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

பண்டித நேருவின் தேர்தல் செல்லாது?

புதுடில்லி, ஜுன் 6—

பண்டித நேரு மக்கள் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது செல்லத்தக்கதல்ல என்று தேர்தல் ஆணையாளரிடம் சீதாராம் செம்காவும், மசூரியதீனும், தனித்தனியே மனு செய்து கொண்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

தேர்தலில் ஊழல்கள் நடைபெற்றதின் காரணமாக முடிவுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மனுவில் குறிப்பிட்டுள்ளனராம்.

பலூனில் அணு ஆயுதம்

நெவாடா, ஜுன் 5—

இன்று முதல் தடவையாக, பலூனில் இருந்து அணு ஆயுதம் ஒன்றை வெடித்துள்ளனராம்.

இந்த ஆயுதம் வெடிக்கப்பட்டதை 70 மைல் தூரத்தில் இருந்து பார்வையிட்டனராம்.

தி. மு. கழக எம்.எல்.ஏ.-க்களுக்கு பர்மாவில் பாராட்டுக் கூட்டம்

9—6—57 அன்று பர்மா தி. மு. கழகத்தின் ஆதரவில், இரங்கூன் நகரில், தமிழகத்தில் வெற்றி பெற்ற தி. மு. கழக சட்டமன்ற—பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாராட்டு முகத்தான் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர். கூட்ட முடிவில் பர்மா தி. மு. கழகத்தின் தேர்தல் முழு விவரங்களடங்கிய நூல்கள் பொதுமக்களுக்கு வினியோகம் செய்யப்படும்.

கழக சட்டமன்ற உறுப்பினர்கட்கு ஊராட்சி மன்ற வரவேற்பு

9-6-57 முற்பகல் 11½ மணிக்கு வடாற்காடு மாவட்டம்-வேலூரை அடுத்த கருகம்பத்தூர் ஊராட்சி மன்றத்தாரால், தோழர் எம். பி. சாரதி எம்.எல்.ஏ., தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ. ஆகியோருக்கு வரவேற்பிதழ் படித்துக் கொடுக்கப்படும்.

தொழிலாளருக்கு 'வேலை மேல் ஊதிய' முறை!

டில்லி மாநாட்டில் பரிசீலிக்கப்படுமாம்

புதுடில்லி, ஜுன் 5—

இரண்டாம் ஐந்தாண்டு திட்ட காலத்தில், நாட்டின் சம்பளக் கொள்கையைப் பற்றி பரிசீலிப்பதற்காக இந்திய சர்க்கார் நியமித்த பரிசிலனைக் குழுவின் சிபாரிசுகள் இந்தியத் தொழிலாளர் நல மாநாட்டில் வருமென்று தெரிகிறது. இம்மாநாடு ஜுன் 11, 12 தேதிகளில் டில்லியில் கூடும்.

தொழிலாளிகள் அதிக அளவிற்கு உற்பத்தி செய்வதற்கான தூண்டுதலை ஏற்படுத்தும் பொருட்டு, 'வேலை மேல் ஊதிய' முறையைக் கொண்டுவரும் யோசனை இருக்குமென்று தோன்றுகிறது. தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் ஊதியங்கள் பொதுவாக உயர்த்தவேண்டும் என்பதும், இது தொழிலில் கிடைக்கும் இலாபங்களுக்கேற்ப அமைய வேண்டுமென்பதும் உத்தேசம்.

தொழில் நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கு பெறுவது சம்பந்தமாக நிபுணர் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையும் மாநாட்டில் வரவிருக்கும் முக்கியமான விஷயமாகும்.

மற்றொரு முக்கியமான பிரச்சினையும் மாநாட்டில் விவாதத்துக்குவரும். தொழிற்சங்கங்களை நடத்தும் முறைகள் பற்றி தொழிலாளிகளுக்கு விசேஷப் பயிற்சி அளிப்பது, நிர்வாகத்துடன் அவர்களுக்கு இருக்க வேண்டிய உறவு, முதிர்ந்த பிரஜையாக சமூகத்தில் தொழிலாளருக்கு இருக்கவேண்டிய அந்தஸ்து முதலியவை விவாதிக்கப்படும்.

பிராவிடெண்ட் நிதி வசதித் திட்டத்தை மேற்கொண்டு, பல தொழிற்சாலைகளுக்கு விஸ்தரிப்பதைப் பற்றியும் பாங்கு, இன்ஷ்யூரன்ஸ், ஓட்டல், சினிமா போன்ற தொழிற்சாலையல்லாத ஸ்தாபனங்களுக்கும் பிராவிடண்ட் நிதி திட்டத்தைக் கொண்டு வருவதைப் பற்றியும் யோசிப்பார்கள். புகையிலைத் தொழில்களுக்கு விஸ்தரிப்பதும் அதில் ஒரு அம்சம்.

தொழிற்சாலைகளில் 'விசை முறை'யைக் கொண்டுவருவது சம்பந்தமாய் முக்கிய நடவடிக்கைகளைப் பற்றிய 'மாடல் நகல் ஒப்பந்தம்' ஒன்று பரிசீலனைக்கு வரும்.

அரசாங்க நிகழ்ச்சிகளுக்கு மட்டும் அனுமதியாம்

கல்வி நிறுவனங்களுக்கு உத்தரவு

சர்க்காருக்கு ஏற்பட்ட திடீர் அச்சம்

எந்த ஒரு முக்கியத்துவத்தைக் கொண்டும் ஒரு கல்வி நிறுவனத்தின் இடமோ, துணைக் கட்டிடமோ, விளையாடுமிடமோ, அதற்குச் சொந்தமான காலியிடமோ அரசியல்கூட்டங்களுக்குக் கொடுக்கப்படக்கூடாதென்றும், ஆனல் மேற்படி நிறுவனங்களின்பொறுப்பிலிருக்கும் அதிகாரிக்கு (மாவட்டக் கல்வி அதிகாரி அல்லது பிரின்சிப்பால் காஸ்பாண்டண்ட் அல்லது நிருவாகி அல்லது ஸ்தல ஸ்தாபனத்தின் நிருவாக அதிகாரி) தமக்குச் சரியெனத் தோன்றினல், அவ்விடங்களை நிருவாகம் அல்லது மாநில அரசினர் அல்லது இந்தியப் பேரரசினரால் ஏற்பாடு செய்யப்படும் பொதுவிழாக்கள்—அரசியல் அல்லாத மற்ற நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கலாமென்றும் சென்னை கல்வி விதிகளுக்கான திருத்தம் ஒன்று கூறுகிறது.

மேலும் இத்திருத்தம் கூறுவதாவது:

இதன் தொடர்புடைய அதிகாரிகள் ஐயத்திற்கிடமான சேதிகளில் கல்வித் துறை இயக்குநர் அவர்களிடமிருந்து அனுமதிகள் பெறவேண்டும். இந்தச் சட்டம் சென்னைக் கல்வி விதிகளின்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு நிருவாகங்களின் கீழ் உள்ள எல்லா கல்வி நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

திடீர் அக்கறை

சென்னை, ஜுன் 5—

சென்னை நகர சிற்றுண்டிசாலைகளில் பாத்திரங்களை சுத்தமாக கழுவி, சுகாதார முறையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், அதற்கான வேலைகளை உடனடியாக செய்யுமாறு சென்னை நகரசபைக்கு சென்னை அரசாங்கம் சுட்டிக்காட்டி வேண்டுகோள் விடுத்துள்ளதாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வண்ணைத் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக் கூட்டம்

15-6-57 சனி மாலை 6 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில்

தலைவர்: **இரா. செழியன் M.A.**

★

அண்ணா

அவர்கள் பேசுவார்

நன்கொடை: ரூ. 1; அணு 8

—தி. மு. க. 4-வது வட்டக் கிளை, சென்னை

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

வத்தலகுண்டு:
ரேடியோ மைதானத்தில்
8—6—57 அன்று
தலைவர்: ஏ. சின்னக்காளை
பேசுவோர்:
கே. எம் எம். மேத்தா
முகதா

★

பள்ளிபாளையம்:
(சேலம் மாவட்டம்)
நாகு செட்டியார் திடலில்
தலைவர்: ஓய். ஏ. வேலப்பன்
பேசுபவர்:
கோவை-செழியன்
(தேதி—நேரம் குறிப்பிடப்படவில்லை.)

★

சென்னை—தாம்பரம்:
மே. தாம்பரம், பெரியார் நகர்
(மார்க்கெட் மைதானத்தில்)
8—6—57 மாலை 6 மணிக்கு
தி. மு. க. 3-ம் ஆண்டு விழா
தலைவர்: மூர்த்தி
பேசுவோர்:
கண்ணதாசன்
எஸ். எஸ். தென்னரசு
வி. எஸ். கோவிந்தராசன்
முனு-ஆதி
டி. ஆர். இராசன்

★

திருவெண்காடு:
மேல வீதியில்
8—6—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழக 4-ம் ஆண்டு விழா
தலைவர்: அ. சுப்பையன்
பேசுவோர்:
சத்தியவாணிமுத்துஎம்.எல்.ஏ.
சி. ஜம்பு
என். கிட்டப்பா
எஸ். சோமசுந்தரம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.